## ஆசிரியர்

சிறுபஞ்ச மூலம் நூலின் ஆசிரியர் காரியாசான். காரி என்பது இவரது இயற்பெயர். ஆசான் என்பது தொழிலின் அடிப்படையில் வந்த பெயர்.

இவர் மாக்காயன் என்பவருடைய மாணவர். ‘மழைக்கை மாக்காரி யாசான்’ என்ற தொடர் நூலாசிரியர் கொடை வள்ளல் என்பதைப் புலப்படுத்துகிறது. இவரது காலம் நான்காம் நூற்றாண்டு.

ஆசிரியர் கொல்லாமையை வலியுறுத்திக் கூறுவதால் (**சிறுபஞ். 51**), அவர் சமண சமயத்தில் ஈடுபாடுடையவர் என்று கொள்ளலாம்.

### 3.2.1 நூல் அமைப்பும் சிறப்பும்

சிறுபஞ்ச மூலத்தில் பாயிரச் செய்யுள் உட்பட 100 செய்யுள்கள் உள்ளன. பாடல்கள் நேரிசை வெண்பாவால் ஆனவை. முன்பு கூறியது போல் ஐவகை வேர்களும் நோயை நீக்குகின்றன. அதைப் போல் இந்த நூலின் ஒவ்வொரு பாடலிலும் கூறப்படும் ஐந்து கருத்துகளும் மக்களை நல்வழிப்படுத்தும் அறநெறிகளாகும். அவற்றைக் கடைப்பிடித்து ஒழுகுமாறு ஆசிரியர் வலியுறுத்துகிறார். இந்த அறக்கருத்துகளே நூலில் பாடுபொருளாக விளங்குகின்றன. பல பாடல்கள் ‘மகடூஉ முன்னிலை’யாக அமைந்துள்ளன. ‘மகடூஉ முன்னிலை’ என்பது. ஒரு பெண்ணை நோக்கிக் கூறுவது போல, பாடலை அமைப்பது. எடுத்துக்காட்டாக, ‘கண்டல் அவிர்பூங் கதுப்பினாய்’ (**சிறுபஞ். 14** தாழைமலர் அணிந்த கூந்தலையுடையவளே! என்பது இதன் பொருள்). பாடல்கள் 48,54,89,92 ஆகியவற்றிலும் இது போன்ற விளிகளைக் (அழைப்புகள்) காணலாம்.

இனி, சிறுபஞ்ச மூலம் கூறும் நெறிமுறைகளைப் பார்ப்போமா? உலகில் பஞ்சத்தின் காரணமாக ஏற்படும் விளைவின்மையை மழை நீக்குகிறது. அதுபோல் உடலுக்கு ஏற்பட்ட நோயைச் சிறுபஞ்சமூலம் என்ற மருந்து நீக்குகின்றது. அங்ஙனமே உயிரைப் பற்றிய பிணிகளைச் சிறுபஞ்ச மூலம் போக்குகிறது.

உயிரைப் பற்றிய பிணிகள் கொலை, பொய், புலால் உண்ணுதல், களவு செய்தல் என்பனவாகும். அவற்றிற்கு மருந்தாக அமையக் கூடியவை

1. அருளுடைமை
2, மெய்ம்மை
3. புலால் உண்ணாமை
4. திருடாமை

ஆகிய நான்கும் மருந்தாக அமையும். இந்த மருந்துகளைச் சிறுபஞ்சமூலம் விளக்குகிறது.

அறமும் அறச்செயல்களின் சிறப்பும் இந்நூலில் பேசப்படுகின்றன. வாழ்வில் பின்பற்ற வேண்டிய அறங்களை ஐந்து வகையாகப் பகுத்துரைக்கின்றார் காரியாசான். அறிவுடையார் செயல்கள், அறிவற்றோர் செயல்கள் ஆகியவை பகுத்துரைக்கப்படுகின்றன.

எது அழகு என்பது சுட்டப்படுகிறது. ஆசிரியரும் மாணாக்கரும் எப்படி இருக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. இவ்வுலகில் ஒரு நோயும் இன்றி வாழ்பவர் யார்,

எண்பதாண்டுகளுக்கு மேலும் வாழ்பவர் யார் என்பது பற்றியும் தெரிந்து கொள்ளலாம்.

மக்கட்பிறவியும், அப்பிறவிப்பயனும் பற்றிக் கூறப்படுகிறது. யாருக்கு மீண்டும் பிறவி இல்லை என்பதை இரண்டு பாடல்கள் எடுத்துக் கூறுகின்றன. ஆண்டுக்கும் அறிவுக்கும் உள்ள தொடர்பு பற்றிய அருமையான பாடல்களும் சிறுபஞ்சமூலத்தில் உண்டு. அரசர், அமைச்சர், தலைவன், உழவர் ஆகியோர் இயல்புகள் வரையறுக்கப்படுகின்றன. பொது நல உணர்வுடையவன் சுவர்க்கம் புகுவான் என்ற கருத்தமைந்த பாடலும் உண்டு.

குளத்தைத் தோண்டல், மரக்கிளைகளை வெட்டி நடல், பாதைகளை அமைத்தல், மேடான நிலங்களை உள் தோண்டல், உழுகின்ற வயலாக்குதல், வளம்படத் தோண்டி கிணற்றை உண்டாக்குதல் ஆகிய ஐந்தும் மிகுதியாகச் செய்தவனே சுவர்க்கம் புகுவான் என்கிறார் காரியாசான் **(சிறுபஞ்-66).**

காரியாசான் சிறுபஞ்சமூலம் என்ற நூலின் வாயிலாகப் பண்டைய தமிழரின் வாழ்வியல் மதிப்பீடுகளை எடுத்துக்காட்டுகிறார். அறநெறிகளே சிறந்த வாழ்க்கைக்கு வழிகாட்டி என்பதை விளக்குவதே இந்நூலின் நோக்கமாக அமைவதைக் காணலாம். அவ்வாறு விளக்கும் போது விலங்குகளையும், மரங்களையும், பறவைகளையும் ஒப்பிடுவது சிறப்பாக உள்ளது. பூவாது காய்க்கும் மரங்கள், பூத்தும் காய்க்காத மரங்கள், காக்கைகள், செவ்வெறும்புகள், நண்டு, சிப்பி, வேய், கதலி ஆகியவற்றின் இயல்புகள் சுட்டிக்காட்டப்படுகின்றன.

நன்மை தருவன, தீமை தருவன, நகைப்புக்கு உரியன என்ற வாழ்வியல் உண்மைகளை எடுத்துக்காட்டுகிறார். உறுதிப் பொருள்களை எடுத்துரைக்கும் காரியாசான் அறவழியே நில்லுங்கள் என்று ஊக்கப்படுத்துகிறார். ஐந்து வேர்கள் உடல் நோயைத் தீர்க்கின்றன. அதுபோல இங்குக் கூறப்படும் உறுதிப் பொருள்கள் வாழ்வைத் தெளிவாக உணர்ந்து கொள்ளவும். வழி நடக்கவும் துணை புரிகின்றன. பிறவிப் பிணியைத் தீர்க்க வல்ல அருமருந்தாகவும் அது அமைகிறது. சிறு பஞ்சமூலம் சொல்லும் பெருநெறிகள் இவையே.

பஞ்ச என்ற சொல் ஐந்து என்ற எண்ணைக் குறிக்கும். மூலம் என்றால் வேர் என்று பொருள். மருத்துவ நூலில் கூறப்படும் ஐந்து வேர்கள் பின்வருவன: அவை

1. கண்டங்கத்தரி வேர்
2. சிறு வழுதுணை வேர்
3. சிறுமல்லி வேர்
4. நெருஞ்சி வேர்
5. பெருமல்லி வேர்

என்பனவாகும்.

இந்த ஐந்து வேர்களும் மக்களின் உடல் நோயைத் தீர்க்க வல்லன. இது போல் ஒவ்வொரு பாடலிலும் கூறப்படும் ஐந்து பொருள்களும் மக்களின் பிறவி நோயைத் தீர்க்க வல்லன.